**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– இருகால்கள் பாதிக்கப்பட்ட 1000 மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம்– 2016–17 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்வது –ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.83

நாள்: 25–11–2016<br>துன்முகி, கார்த்திகை10,<br>திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:–

1. அரசாணை(1டி) எண்.48, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 24–11–2015
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் ந.க.எண்.2085/ இவாததி/2016, நாள் 22.07.2016

-------

**ஆணை:**

2016–2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏனையவற்றுடன் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:–

“2016–2017 ஆம் ஆண்டில், இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட விலையில்லா 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கப்படும்.”

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 2015–2016 ஆம் நிதியாண்டில், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், 1000 எண்ணிக்கையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்கி வழங்கிட ரூ.6,35,90,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 2016–2017 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கல்வி பயிலும்/சுயதொழில்/ பணிபுரியும்

மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தினை உயர்த்த, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்க வேண்டியது அவசியம் எனவும், 2016–17ஆம் நிதியாண்டில் பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்க 32 மாவட்டங்களிலும் 2446 பயனாளிகள் இருப்பதாகவும் தெரிவித்து ஆணை கோரியுள்ளார். இந்நிதியாண்டிலும், இதனை தொடர் திட்டமாக நடைமுறைப்படுத்தி, ரூ.6,45,59,000/– மதிப்பீட்டில் 1000 எண்ணிக்கையிலான, இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்குவதற்கும் மேலும், இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை ஏற்ற, இறக்கத்தினை பொறுத்து அரசின் நிதி ஒப்பளிப்புத் தொகைக்குள் கூடுதலாக அல்லது குறைந்த எண்ணிக்கையில் வாங்கி வழங்கவும் அனுமதி அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று பின்வருமாறு ஆணையிடுகிறது:–

i. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களின் விலை, தோராயமாக ரூ.59,864/–க்குள் நிர்ணயம் செய்திட வேண்டும்.

ii. 2016–2017 ஆம் நிதியாண்டில், இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் வழங்கப்படும் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தினை தொடர, திட்டத் தொடராணையும், இந்நிதியாண்டில் 1000 எண்ணிக்கையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வாங்கி வழங்கிட ரூ.5,98,64,000/– (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

iii. மாற்றுத் திறனாளிகளுக்கான இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

iv. தற்பொழுது மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தின் கீழ் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், பயணப்படி பெறும் மாற்றுத் திறனாளி பணியாளர்களுக்கு வழங்க தேவையில்லை என அறிவுறுத்தப்படுகிறது.

v. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி, திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அதிகாரமளிக்கிறது.

**5.** மேலே பத்தி 4(ii)ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

> "**2235—**சமூக பாதுகாப்பும் நலனும்— **02** சமூக நலன் **—101** – மாற்றுத் திறனாளிகள் நலன்—I திட்டத்தில் சேராதது CO மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் **—19** இயந்திரமும் சாதனமும் **01** வாங்குதல்".
> (த.தொ.கு 2235 02 101 CO 1917)

**6.** மேலே பத்தி 4(ii)—ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.1,39,34,000/—2016—17 ம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கொண்ட செலவினத்திற்கு **2016—17** ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி **3**ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4 (ii)ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை **2016—17** ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(சந/வ.செ.பொ—I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.61055/நிதி(சந)/2016, நாள் 22.11.2016—ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1274 (ஆயிரத்து இருநூற்று எழுபத்து நான்கு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை—78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை—18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை— 18. (பெயரில்)

**<u>நகல்:-</u>**
நிதி (சந/வ.செ. பொது. I/II) துறை, சென்னை—9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை—9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை—9.
இ. கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.